Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 147/ 2022

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | அறிஒளிமணி | Calling: | மேஸ்திரி வேலை |
| Father's/Husband's Name: | குப்புராம் | Religion: | |
| Village: | சங்கராபுரம் | Age: | 34 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 23.09.2025

(எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது .)

அ.சா. 4 முதன்மை விசாரணை

நான் சங்கராபுரத்தில் வசித்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன்.எதிரிகளை தெரியும். அ.சா.1 முத்துலட்சுமி எனது மனைவி. கடந்த 20.05.2022 ம் தேதி இரவு 08.30 மணிக்கு மகளிர் குழுவில் எனது மனைவி இருப்பதால் குழுவிற்கு பணம் கட்டுவதற்காக எங்கள் ஊர் ஆலமரத்தின் அருகே உள்ள மாரியம்மன் கோவிலுக்கு சென்றார். குழுவில் பணம் தள்ளுபடி செய்யபோவதாக தெரிந்து தமிழ்இலக்கியாவிடம் எனது மனைவி அ.சா. 1 அதுக்குறித்து கேட்டார். அதில் எனது மனைவிக்கும், தமிழ் இலக்கியாவிற்கும் வாய் வாக்குவாதம் ஏற்பட்டது. அந்த இடத்திற்கு வந்த தமிழ் இலக்கியாவின் கணவர் இராஜேஷ் எனது மனைவியை தேவடியா, உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று தகாத வார்த்தைகளால் அசிங்கமாக திட்டியுள்ளார். அது குறித்து ஊரில் உள்ளவர்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் படி சொன்னதால் நானும் எனது மனைவியும் அம்பலூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகளின் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அறிஒளிமணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K